**நெலுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நெலுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டின்போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான வேலைக் கடன்கொடுத்தோர் நிதியேற்பாடாகிய ரூபா 549,674 நீதிமன்றத் தண்டப் பண வருவாயாகிய ரூபா 10,000 மற்றும் கடை வாடகை தண்டப் பணமாகிய ரூபா 79,552 என்பன கணக்கில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) JCB இயந்திரத்திற்குப் பெறவேண்டிய ரூபா 200,772 வாடகை வருவாய் மற்றும் உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 853,685 பங்களிப்புத் தொகை என்பன கணக்கிலிடப்படவில்லை.

(இ) முன்னைய ஆண்டின்போது ரூபா 7,200,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருந்த டிறக் வண்டியினது கிரயம் மீளாய்வாண்டிலும் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய 15 கணக்கீட்டு விடயங்களது மீதிகளும் அவற்றுடன் தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காணப்படும் மீதிகளுக்குமிடையே ரூபா 46,968,339 கூட்டுத்தொகையுடைய வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 தொங்கற் கணக்கு

முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 72,839 தொங்கற் கணக்கு செலவு மீதியை இனங்கண்டு தேவையான சீராக்கலைக் செய்து கணக்கைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 25 வேலைகளின் பொருட்டுப் பெறவேண்டிய ரூபா 13,898,048 கூட்டுத்தொகையுடைய அரசாங்க உதவு தொகை, அனுமதிப்பத்திரக் கட்டணமாகிய ரூபா 41,850 வாடகையாகிய ரூபா 232,396 முத்திரைக் கட்டணமாகிய ரூபா 2,500,000 மற்றும் நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 60,917 என்பனவும் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் வாரச் சந்தை முற்பணக் கொடுப்பனவுத் தொகையான ரூபா 198,400 என்பனவும் அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவுத் தினத்தன்று உள்ளவாறு 20 வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த ரூபா 10,842,107 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

நிலையான வைப்புத் தொகையான ரூபா 70,000 சம்பந்தமான வைப்புச் சான்றிதழும் ரூபா 104,337 கூட்டுத்தொகையுடைய இனங்காணப்படாத வருவாய் சம்பந்தமான பற்றுச்சீட்டும் பட்டோலையும் ரூபா 553,683 கூட்டுத்தொகையுடைய அனுமதிப்பத்திரக்கட்டண நிலுவை மற்றும் செலவினக் கடன்கொடுத்தோர் மீதி என்பன தொடர்பாக பட்டோலைல மற்றும் ரூபா 48,465 கையிருப்பு தொடர்பான கையிருப்புப் பதிவேடு மற்றும் பொருட்கணிப்புச் சபை அறிக்கை போன்று சான்றுகள் இன்மையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே விபரிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை விசேட ஏற்பாடுகள் அதிகாரச் சட்டம் | வேலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது அறவிபடப்பட்ட ரூபா 14,000 முத்திரைக்கட்டணம் தொடர்பாக குறித்த ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | இரு வங்கி நடைமுறைக் கணக்குகளின் மூலம் வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ளதும் கொடுப்பனவுக் காலம் கடந்துவிட்டதுமான ரூபா 46,674 பெறுமதியான 08 காசோலைகள் சம்பந்தமாக குறித்த பிரமாணங்களின்படி நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1645, 1646 என்பன | மீளாய்வாண்டின்போது 10 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டவணைகளும் மாதாந்தச் செயலாற்றல் பொழிப்பும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 226,718 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,616,104 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 3,389,386 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் வருவாய்க்கான உதவி, சுய உற்பத்தில வருவாய், மீண்டுவரும் செலவினம் என்பன தொடர்பான பொழிப்பு பின்வருமாறு.

| ஆண்டு | மீண்டுவரும் செலவினம் | வருவாய்க்கான உதவி | சுய உற்பத்தி வருவாய் | மீண்டுவரும் செலவினம் | சபையின் சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 23,397,853 | 14,080,858 | 9,316,995 | 23,171,133 | 13,854,138 |
| 2014 | 22,438,984 | 14,253,896 | 8,185,088 | 18,822,879 | 10,637,791 |
| 2013 | 14,238,049 | 7,062,535 | 7,175,514 | 13,624,529 | 6,449,015 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய 2 ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் சுய உற்பத்தி வருவாயிலும் கூடுதலாக மீண்டுவருஞ் செலவினம் அதிகரித்திருந்தது.

(ஆ) சபைக்குக் கிடைக்கும் வருவாய்க்கான உதவி கிடைக்காதுபோயின் வருமானத்தின் மூலம் மீண்டுவருஞ் செலவினத்தை ஈடுசெய்ய முடியாது போய்விடும் எனத் தோன்றியபோதும், செலவினத்தைக் குறைப்பதற்கு சபை கவனஞ் செலுத்தவில்லை.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 குத்தகை வாடகை

முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 257,924 ஆகவிருந்த குத்தகை வாடகை வருவாய் மீளாய்வாண்டின் முடிவளவில் ரூபா 232,395 குறைவடைந்த போதும், 07 தொழிலாளர்களிடமிருந்து 03 ஆண்டுகளுக்கு அதிகாமக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 151,603 அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 2,500,000 பெறப்படவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.1.1 வாகனக் கட்டுப்பாடு

(i) 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின்படி சபையின் 05 வாகனங்களுக்குக் காப்புறுதி பெறப்படவில்லை.

(ii) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் சபையின் 10 வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை.

அரச மற்றும் அரைப்பங்கு அரசாங்கத்திற்குரியதாக உள்ள நிறுவனங்களது சகல மோட்டார் வாகனக் காப்புறுதியானது 2014 டிசெம்பர் 26 ஆந் திகதிய 08/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினூடாக அல்லது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினூடாகக் காப்புறுதி செய்யப்பட வேண்டுமாயினும், சபைக்குரிய 03 வாகனங்கள் தனியார் காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

### 3.1.2 மனிதவள முகாமைத்துவம்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இரண்டாம் நிலை ஊழியர்கள் 06 பேர் மற்றும் ஆரம்ப நிலை ஊழியர்கள் 08 பேர் ஆகியோரது பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) பிரதியீட்டு மற்றும் அமைய ஊழியர்கள் 09 பேரது மிகை நிலவியபோதும் அப்பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் சபையின் சுய உற்பத்தி வருவாய் போதிய அளவு இல்லாதிருக்கையில் சம்பளங்களை வழங்குவது பிரச்சினைக்குரியதாகவுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 ஊழியர் கடன்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 07 ஊழியர்களிடமிருந்து ரூபா 16,304 கூட்டுத்தொகைக் கடன் அறவிடப்படுவதானது 05 ஆண்டுகளைக் கடந்திருந்தபோதும், அதனை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

அங்கத்தவர்களது நிதியேற்பாட்டின் மூலம் நிறைவேற்றப்படும் 02 செயற்திட்டங்களுக்கு ரூபா 100,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அச் செயற்திட்டங்கள் அமுலாக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 93 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சகல கழிவுகளும், வீடுகளில் உள்ள கழிவுகளும், வேறு கழிவுப் பொரட்களும் அகற்றப்படுவதற்குப் பிரதேச சபையால் இயலுமானளவு நடவடிக்கை எடுக்கப்படுவது சபையின் பணியாகும். எனினும், சபை அதன் பொருட்டு முறையான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடங்கிய ஒரு செலவின விடயத்தின் மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 500,000 வேறு 04 செலவின விடயங்களது ரூபா 2,466,613 கூட்டுத்தொகைச் சேமிப்பும், வேறு 04 செலவினங்களில் வரம்பிலும் கூடுதலாக ரூபா 34,818,715 செலவினமும், 06 வருவாய் விடயங்களில் இலக்கிடப்பட்ட வருவாயிலும் ரூபா 7,11,882 குறைந்தும் இருந்தமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.லே இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

**4.3 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

நபர்களை உயரத்தூக்கும் ரூபா 25,000 கிரயமுடைய இயந்திரங்கள் 2014 நவெம்பர் 26 முதல் பயன்படுத்தப்படாது சபை வளாகத்தில் பாதுகாப்பற்று இருந்தது.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

சபை பயன்படுத்தும் 10 வாகனங்களது உரித்தைச் சபைக்கு ஒப்படைப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறையில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டம்
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்